வாசிக்க: பிலிப்பியர் 3:4-14

***"நீ வளருவது எல்லாருக்கும் தெளிவாகும்படி, இவைகளிலேயே கவனம் செலுத்தி, இவைகளிலேயே ஈடுபட்டிரு" (1 தீமோ 4:15)***

ஆன்மீகப் பிறப்பு ஒரு குறிப்பிட்ட சமயத்தில் நடந்துவிடுவது; வளர்ச்சியோ நெடுகவே நடப்பது. இறைமகனாய்ப் பிறந்த இயேசு தமது வளர்ச்சிக்காக ஏறத்தாழ 30 ஆண்டுகள் எடுத்துக்கொண்டார் (லூக் 3:23). அதுவரை அவர் தனது வெளியுலகப் பணியைத் துவங்கவில்லை; ஞானத்திலும், உடலுருவத்திலும், தேவ கிருபையிலும், மனிதர் தயவிலும் ''வளர்ந்தார்'' என்கிறார் லூக்கா (லூக் 2:52) — மன வளர்ச்சி, உடல் வளர்ச்சி, ஆன்மீக வளர்ச்சி, சமூக வாழ்வில் வளர்ச்சி.

வாலிபன் இயேசு பன்னிரு வயதிலேயே எவ்வளவோ அறிந்திருந்தார். அவரது ஞானம் மார்க்கத் தலைவரையும் மக்களையும் வியப்பில் ஆழ்த்திற்று. ஆனாலும், நிச்சயமாக அவருக்கு அவசரவுணர்வு இருந்தும், ஆத்திரப்பட்டு ஊழியத்தில் இறங்கவில்லை, காத்திருந்தார். சுற்றியுள்ள தேவைகளால் அழுத்தப்பட்டுத் தள்ளப்படத் தம்மை அவர் அனுமதிக்கவில்லை. ஊழியத்திற்குமுன் அதற்காக இயேசு எடுத்துக்கொண்ட இந்த ஆயத்தத்தை நாம் கவனிக்காமல்விடுவது நமக்கு எத்தனை கேடு!

தீமோத்தேயுவுக்குப் பவுல் எழுதிய முதல் கடிதத்தில் தலைவனொருவன் புதிய சீடனாயிருக்கக்கூடாதென்று வலியுறுத்தினார் (1 தீமோ 3:6). முதிர்ச்சியற்றவன் அதிகார ஆசனங்களுக்கு தூக்கப்படும்போது பெருமை அவனை அலைக்கழிக்கிறது. பல்டியடித்துத் தலைமோதி, தனக்கு அவமானத்தையும் திருப்பணிக்கு அவமகிமையையும் கொண்டுவருகிறான். பவுல் இதைப் பிசாசின் வீழ்ச்சிக்கு ஒப்பிடுகிறான். 4,5ஆம் வசனங்களில் வீட்டுப்பொறுப்பைக் குறித்தும் 7ஆம் வசனத்தில் உலகில் மதிப்பாக நடந்துகொள்வதைக் குறித்தும் அப்போஸ்தலன் எழுதுகிறார். இவையிரண்டும் ஒரே நாளில் முளைத்துவிடும் காளான்களல்ல.

முதிர்ச்சியற்ற ஊழியர் பலரால் நமது பிரசங்க பீடங்கள் மட்டரகமாகியுள்ளன. மனந்திரும்பியவுடன் ''தாமதமின்றி'' பிரசங்கிக்கத் துவங்கிய பவுலை இவர்கள் தங்களுக்குச் சாதகமாக மேற்கோள்காட்டிக்கொள்வார்கள் (அப் 9:20). ஆனால் கிறிஸ்துவைச் சந்திக்குமுன் இந்த யூதப்பித்தர் எத்தனை ஆண்டுகள் கண்டிப்பான பயிற்சியும் போதனையும் பெற்றிருந்தாரென்பதை மறந்துவிடுகிறார்கள். வாழ்நாள் முழுவதும் பவுல் தனது வளர்ச்சியைக் குறித்து மிகுந்த அக்கறை கொண்டிருந்தார் (அப் 9:22அ; பிலி 3:8-14). ''நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்'' என்றார் அவர் (பிலி 3:12). பவுல் இறப்பை எதிர்நோக்கியிருந்த வேளையிலும் தனது ''புத்தகங்களைக்'' கொண்டுவரச் சொன்னாரே! (2 தீமோ 4:13).

*வாலிபன் தன் வழிகளைச் சுத்தம் செய்திட*
*வார்த்தையின்றி வேறேயொரு வழியுமில்லையே;*
*வானவருக் கெதிராகப் பாவம் செய்யாமல்*
*வாழ்ந்திட வசனம் உள்ளில் இருப்பதவசியம்!*
*— மிஷனரி K. பொன்ராஜ் ஐசக்*